<u>காங்கயம் நகராட்சி</u>
<u>மன்றக்கூட்டத்தாள்</u>

**நிகழும் ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் தமிழ் மாதம் கார்த்திகை 14–ஆம் நாள் ஆங்கில வருடம் 2018 நவம்பர் 30-ம் தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணகூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

<u>**மன்றப்பொருள்:**</u> 1

**கோப்புஎண் : 56/2017 /சி1**

காங்கயம் நகராட்சியில் மின்னனுமுறையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஆணையாளர் அவர்களுக்கு Digital Signature card வாங்குவதற்கு "SADHVI DIGITAL SOLUTIONS" நிறுவனத்திற்கு தொகை ரூ.2400/- (இரண்டாயிரத்து நானூறு) வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலககுறிப்பு**</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1043 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>**மன்றப்பொருள்:**</u> 2

**ந.க.எண்.143/2017/எப்1**

காங்கயம் நகராட்சி, வார்டு எண்.3, சென்னிமலை ரோடு,ரீ.ச.எண்கள்34/2A, 2B, 1B2, 3A1, 35/2, 36/2A மற்றும் 36/2B-ல் 4.60 ½ஏக்கர்மனைப்ரப்பில் அமையும் ஆர்.சி.சிதிருமண மண்டப கட்டிடத்திற்கு உரிமையாளர் திரு. N.S.N. நடராஜ் மற்றும் N.S.N டிரஸ்ட், சென்னிமலை ரோடு,காங்கயம் அவர்களால், நகர் ஊரமைப்புத்துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண்.748/2018/சேம–3, நாள்.04.10.2018வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி காங்கயம் நகராட்சிக்கு பொதுத்திறவிடம் (OSR) தானமாக வழங்க காங்கயம் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண். 5324/2018, நாள்.09.11.2018-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

காங்கயம் நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட திறவிடம் (OSR) பகுதி 1866.23 ச.மீ பரப்பு கொண்ட காலியிடத்திற்கு செக்குப்பந்தி விபரம்.

ரீ.ச. எண்.85 நெ காலை சென்னிமலை – காங்கயம் தென்வடல் ஹைவேஸ் ரோட்டுக்கும் மேற்கு, N.S.N டிரஸ்ட்க்கும் வடக்கு, நான் (N.S.N. நடராஜ்) நிறுத்திக்கொண்ட பாகத்துக்கும் கிழக்கும், தெற்கும், இதன் மத்தியில் வடபுறம் கிழமேல் 63.22 மீட்டர், தென்புறம் கிழமேல் 50.13 மீட்டர், கிழபுறம் தென்வடல் 35.43 மீட்டர், மேல்புறம் தென்வடல் 32.93 மீட்டர்.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

மேற்படி, காங்கயம் கிராமம், ரீ.ச.எண்கள் 34/2A, 2B, 1B2, 3A1, 35/2, 36/2A மற்றும் 36/2B-ல் 4.60 ½ ஏக்கர்மனைப்பரப்பில் அமையும் ஆர்.சி.சி திருமண மண்டப கட்டிடத்திற்கு உரிமையாளர் திரு.N.S.N. நடராஜ் மற்றும் N.S.N டிரஸ்ட், சென்னிமலை ரோடு, காங்கயம் அவர்களால், நகர் ஊரமைப்புதுணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 748/2018/சேம–3, நாள்.04.10.2018 வரைபடத்தில் தெரிவித்துள்ளபடி காங்கயம் நகராட்சிக்கு பொதுத்திறவிடம் (OSR) தானமாக வழங்க காங்கயம் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண். 5324/2018, நாள்.09.11.2018-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளதை மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1044 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 3

**கோப்பு எண் : 1627/2018/இ1**

காங்கயம் நகராட்சியில் தானியங்கு குடிநீர் மையங்கள் அமைக்க 15.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் விபரப்படி ஒரு நிறுவனத்திடமிருந்து Offline tender கிடைக்கப் பெற்றுள்ளது.

| ஒப்பந்ததாரர் பெயர் | அமைக்கப்படும் இடங்கள் |
|---|---|
| AVVA Marketing, 24, Bharathidasan street, Teachers colony, Erode – 638 011 | 18 இடங்கள் |

மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகாரம் செய்ய மன்றத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1045 . நாள்.30.11.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 4

**ந.க.எண்.755/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலைய கடை எண்.2—ஐ ரமேஷ் மற்றும் கடை எண்.8—ஐ அன்சர் பாட்சா என்பவர் 01.12.2016 முதல் 30.11.2019 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமை நகர்மன்ற தீர்மான எண்.466, நாள்.11.11.2016 படி வழங்கப்பட்டது. குத்தகைதாரா் 12 மாத வாடகை டெபாசிட் மற்றும் டேவணித் தொகையும் நகராட்சியில் செலுத்தியுள்ளனர். மேற்படி கடைகளுக்கு 01.05.2017 முதல் வாடகை செலுத்தப்படாமல் நிலுவையாக இருந்ததால் வாடகை செலுத்த கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டும் வாடகை தொகையை செலுத்தாமல் இருந்ததால், 31.03.2018 அன்று கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது இவர்களின் வாடகை நிலுவை தொகை மற்றும் வைப்புத் தொகை விவரம் பின்வருமாறு,

| குத்தகைதாரர் பெயர் | கடை எண் | நிலுவைத் தொகை | வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1.ரமேஷ் | 2 | ரூ.244260/— | ரூ.396100/— |
| 2.அன்சர்பாட்சா | 8 | ரூ.259364/— | ரூ.314000/— |

இவ்வைப்பு தொகையானது காலம் கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்கண்ட வைப்புத்தொகையில் இருந்து வாடகை மற்றும் G.S.T நிலுவை தொகையினை பிடித்தம் செய்து வாடகை நிலுவைக்கு வரவு வைக்கவும், மேற்படி கடையின் குத்தகை உரிமத்தினை ஏல நிபந்தனைகளின்படி ரத்து செய்யவும் மேலும், நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு கடை எண்.2 மற்றும் 8—ஐ பொது ஏலத்திற்கு கொண்டு வரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1046 . நாள்.30.11.2018**

**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 5

**<u>ந.க.எண்.1805 /2018/சி1</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.15981 /2016 / எச்1, நாள்.19.11.2018–ந் தேதிய கடிதத்தில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படியும், நிலைகளின் படியும், நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப பணியிடங்களை தோற்றுவிக்க கருத்துரு கோரப்பட்டுள்ளது. காங்கயம் தேர்வுநிலை பேரூராட்சியாக இருந்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை ) எண்.99, நாள்.01.06.2010–இன்படி காங்கயம் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியானது 22.17 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பெரிய நகராட்சியாகும். மேலும் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 32147 மக்கள் தொகை கொண்டதாகும். எனவே நகராட்சியின் இன்றியமையாத பணிகள் மற்றும் அலுவல் பணிகள் செவ்வனே நடைபெறும் வகையிலும், புதிய பணியிடம் தோற்றுவிக்கப்படும் பட்சத்தில் பணியாளர் செலவினம் 49 சதவீதத்திற்கு குறைவாக உள்ளதாலும், நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப கீழ்கண்ட பணியிடங்களை தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பதவியின் பெயர் | ஊதிய விபரம் | தற்போதுள்ள அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | இரண்டாம் நிலை நகராட்சியின் தரத்திற்கான பணியிடங்களின் எண்ணிக்கை | புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | கணக்கர் | Level-10 - 20600-65500 | 0 | 1 | 1 |
| 2 | இளநிலை உதவியாளர் | Level-8 - 19500-62000 | 3 | 5 | 2 |
| 3 | ஸ்டோர்கீப்பர் | Level-8 - 19500-62000 | 0 | 1 | 1 |
| 4 | காசாளர் | Level-8 - 19500-62000 | 0 | 1 | 1 |
| 5 | தட்டச்சர் | Level-8 - 19500-62000 | 1 | 2 | 1 |
| 6 | சந்தை கண்காணிப்பாளர் | Level-10 - 20600-65500 | 0 | 1 | 1 |
| 7 | வருவாய் உதவியாளர் | Level-8 - 19500-62000 | 4 | 6 | 2 |
| 8 | புள்ளி விவர குறிப்பாளர் | Level-13 35900-113500 | 0 | 1 | 1 |
| 9 | ஓட்டுநர் | Level-8 - 19500-62000 | 1 | 8 | 7 |
| 10 | செயின்மேன் | Level-1-15700-50000 | 0 | 1 | 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | A.E/ J.E/ Overseer | Level-11-35400 - 112400 | 0 | 2 | 2 |
| 12 | பட வரைவாளர் | Level-11-35400 - 112400 | 0 | 1 | 1 |
| 13 | குழாய் ஆய்வாளர் | Level-8 - 19500-62000 | 1 | 2 | 1 |
| 14 | பணி ஆய்வாளர் | Level-8 - 19500-62000 | 1 | 2 | 1 |
| | **மொத்தம்** | | **11** | **34** | **23** |

**<u>அலுவலககுறிப்பு</u>**

காங்கயம் நகராட்சியானது இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு எட்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. எனவே நகராட்சியின் அலுவல் பணிகள் செவ்வனே நடைபெறும் வகையில் நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப கூடுதலாக பணியிடங்களை தோற்றுவிக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கருத்துரு அனுப்ப அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1047 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 6

**கோப்பு எண் : 232 /2017 /இ1**

காங்கயம் நகராட்சியில் நடைபெறும் பொதுநிதி மற்றும் திட்டப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அழைப்பை மாவட்ட, மாநில நாளிதழ்கள் மற்றும் செய்தி மலரில் பிரசுரம் செய்வதற்கும், மேலும் நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் சார்ந்த இதர விளம்பரங்கள் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 (ரூபாய் மூன்று ) இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1048 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>மன்றப்பொருள்:</u>** 7

**கோப்பு எண் : 1355/2018 /இ1**

காங்கயம் நகராட்சியில் 2018–19ம் ஆண்டு ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த முறையில் 20KLD திறன் கொண்ட மனிதக் கழிவுகளை மேலாண்மை செய்திட FSTP Unit (Fecal sludge treatment கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.200.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருநூறு இலட்சம் மட்டும்) நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் Roc no. 26888 /UGSS-2/2018, Date:12.11.2018–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் FSTP Unit அமைத்திட நகராட்சிக்கு சொந்தமான S.F.No. 357, 4.64 ஏக்கர் அளவுள்ள சென்னிமலை ரோடு குப்பைக்கிடங்கு வடக்கு பகுதியில் 100 மீ நீளம் மற்றும் 95 மீ அகலமுள்ள நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் பணி மேற்கொள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடம் அங்கீகாரம் பெறுவதற்கும், மேலும், மேற்படி பணி குறித்தான வரைபடங்கள் தயார் செய்வதற்கு உத்தேச மதிப்பீட்டு

தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.1049. நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 8

**கோப்பு எண் : 1459/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி **2018–19** ன் கீழ் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் எரியாத தெருவிளக்கு, தண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரதுறை மூலம் குப்பைகள் அகற்றும் பணி ஆகியவற்றிற்கு பொது மக்கள் புகார் தெரிவிக்க புகார் எண் ஸ்டிக்கர் மூலம் விளம்பரம் செய்வதற்கும் மின் கம்பங்களில் எண்கள் எழுதும் பணிக்கு **23.11.18–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 4.90 % | அதிகம் |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 5.80 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1050 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**மன்றப்பொருள்:** 9

**கோப்பு எண் : 1231/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி **2018–19** ன் கீழ் ரூ.0.41 இலட்சம் மதிப்பீட்டில் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் Raw water pumping செய்ய பயன்படும் **17.5** எச்.பி டர்பைன் மின் மோட்டாரின் ஸ்டார்ட்டரில் ML3 Contactor பழுதுகள் சரி செய்தல் மற்றும் இந்த மின் மோட்டாரின் pumping line –ல் உள்ள **200**எம்.எம் Non Return valve பழுது சரி செய்ய contactor மற்றும் NRN ஆகியவைகளை மாற்றி புதியதாக பொருத்தும் பணிக்கு **23.11.18–ல்** நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 4.95 % | அதிகம் |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட + 5.75 % | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1051 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 10

**கோப்பு எண் : 1448/2018/இ1**

காங்கயம் நகராட்சி பொதுநிதி 2018–19 ன் கீழ் ரூ.3.40 இலட்சம் மதிப்பீட்டில் காங்கயம் நகராட்சி அலுவலகத்தில் பொதுப்பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவுகளில் மேஜை, நாற்காலிகள் போன்ற உபகரணங்கள் வாங்கும் பணிக்காக 23.11.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | - 0.10 % | குறைவு |
| 2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீட்டை விட | + 0.50 % | அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட - 0.10 % சதவீதம் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1052 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 11

**கோப்பு எண் : 1386/2016 /இ1**

காங்கயம் நகராட்சியில் சென்னிமலை சாலையில் அமைந்துள்ள சுமார் 4.64 ஏக்கர் உரக்கிடங்கில் பாதி அளவில் சுமார் 30 வருடங்களாக சேகரிக்கப்பட்ட கழிவுகளை Bio – mining முறையில் சுத்தம் செய்து நிலத்தை மீட்டெடுக்க ரூ.145.00 இலட்சங்கள் நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி துவங்க உள்ளது.

தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண்.18281/2016/DO1, நாள்.25.08.2018 –ன் படி பணி துவங்கும் முன்பு அண்ணா பல்கலைக் கழக பேராசிரியர் அவர்களை மூன்றாம் நபர் ஆய்வுப் பணிக்காக பணியமர்த்தவும், அவர்கள் வாயிலாக சேமித்து வைக்கப்பட்ட கழிவுகளை அளவீடு செய்யவும், பணி நடைபெறும் சமயங்களில் கழிவுகளை துல்லியமாக அளவீடு செய்து ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்க சான்றளிக்கவும் உத்திரவிடப்பட்டுள்ளது. அண்ணா பல்கலைக்கழகம், திண்டுக்கல் அவர்களை அணுகிய போது மூன்றாம் நபருக்கான ஆய்வுக் கட்டணமாக மதிப்பீட்டில் ஒரு சதவீதம் தொகையை வழங்குமாறு கோரியுள்ளனர். எனவே, ரூ.1.45 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதியும், தலைமைப் பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப ஆணையில் குறிப்பிட்டபடி அண்ணா பல்கலைக்கழகத்திற்கு உண்டான தொகையை நேரடியாக வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1053 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 12

**கோப்பு எண் : 1627/2018/இ1**

காங்கயம் நகராட்சி குடிநீர்நிதி 2018–19 ன் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் ஐ.பி டேங்க், சந்தைப்பேட்டை எம்.ஜி.ஆர் காடு, தாராபுரம் ரோடுஅய்யாசாமி காலணி, கோவை ரோடு – 2 ஆகிய மேல்நிலைத் தொட்டிகளில் குடிநீர் அளவு மானி பொருத்தும் பணிக்கு 23.11.18–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 4.98 % அதிகம்

2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மதிப்பீட்டை விட + 6.13 % அதிகம்

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட அதிகம். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.வீரா கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1054 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<u>மன்றப்பொருள்:</u> 13

**ந.க.எண் :755/2015/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான நகரப்பேருந்து கடை எண்.6 க்கு 30.10.2018 அன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்பபுள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கடை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை மாதம் ஒன்றுக்கு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 6 | மதன் குமார் | 8500/– |
| 2 | | அன்பழகன் | 7300/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

நகரப்பேருந்து கடைகளுக்கு அரசு மதிப்பு ரூ.8000/– என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளில் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.மதன்குமார் என்பவருடைய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண். 1055 . நாள்.30.11.2018**
**தீர்மானம்:** அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.